**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 08.10.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**1. மேற்குமண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் மிதமான மழையும் மற்ற பகுதிகளில் இலேசான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 08-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.காற்றின் வேகமானது மணிக்கு 04-14 கி.மீ வரை வீசக்கூடும். எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்வதற்கு வயலை தயார் செய்யவும்.
- மானாவாரி விதைப்பில் 10 மீ இடைவெளியில் குறுக்கு உழவு (அ) சரிவுக்கு குறுக்காக குறு வரப்பு அமைத்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும்.
- நிலக்கடலை பயிரில் மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடையை தள்ளி வைக்கவும்.
- நிலவும் வானிலையை பயன்படுத்தி நெல் நடவு செய்தலை கீழ்பாசனப் பகுதிகளில் தொடரலாம். நெல் குலைநோயை கட்டுப்படுத்த ட்ரைசைக்ளசோல் 75% WP @ 400 கிராம் /எக்டருக்கு தெளிக்கவும். இலை சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான்களை கட்டுப்படுத்த, கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 0.4% குருணையை @ 18.75 கிலோ/எக்டருக்கு இடவும்.
- சிறு குறு தானியங்கள் பயிரில் மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடையை தள்ளி வைக்கவும்.
- நிலவும் வானிலைப் பயன்படுத்தி இறவை பருத்திக்கு முதல் மேலுரமாக ஏக்கருக்கு 20 கிலோ யூரியா, 6 கிலோ பொட்டாஷ் மற்றும் 25 கிலோ வேப்பம் புண்ணாக்கினைபோடவும்.
- பருத்தியில் மழை காரணமாக வாடல் மற்றும் வேர்த்தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடியை எக்டருக்கு 2.5 கிலோ + 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்ப்பகுதியில் இடவும்.
- **மஞ்சள் கிழங்கு பருக்கும் நிலையில் உள்ளதால் மண்ணில் அதிக ஈரத்தன்மை இல்லாமல் நீர்ப்பாசனம் செய்யவும். மழையும் காற்றில் ஈரப்பதமும் இருப்பதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. இதை மேலாண்மை செய்ய அசோக்ஸிஸ்ட்ரோபின்** 18.2% + **டிஃபெனோகோனசோல்** 11.4% SC @ 1 **மி.லி./லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.**

- ஆட்டுக்கொல்லி நோய் ஒரு முக்கிய நச்சுயிரி நோயாகும். இது ஆண்டு முழுவதும் காணப்படுகிறது. இந்நோய்க்கான தடுப்பூசியை பருவமழைக்கு முன்னர் போட வேண்டும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 08.10.2025 முதல் 12.10.2025 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 - 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 26 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06 - 22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தெற்கு, தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- நெல் பயரில் தற்போது நிலவும் வானிலையால் கரு நாவாய் பூச்சி தாக்கம் தென்படுகிறது, இதனை கட்டுப்படுத்த மழை நின்ற பின் ஒரு ஏக்கருக்கு தையாமீத்தாக்சைம் 25 WG 40 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக 5 மாதத்திற்ககு மேல் ஆன வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுத்து பாதுகாக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்

### 3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிகவும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 10-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு மற்றும் தென் மேற்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- பாசனப்பயிர்களுக்கு பாசனம் செய்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அனைத்து பயிர்களுக்கு மருந்து தெளிப்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- நெல்லில் பயிர்கள் மழை நீரில் மூழ்காமல் தடுக்க வடிகால் வசதி அமைத்து அதிகபடியான நீரை வெளியேற்றவும்.
- பருத்தி மற்றும் உளுந்து பயிரில் மழைக்கு வாய்ப்புள்ளதால் நிலங்களில் நீர் தேங்க வாய்ப்புள்ளது. அதனால் நிலங்களில் நீர் தேங்காமல் இருக்க வடிகால் அமைக்கவும், இல்லையேல் இலைகள் மஞ்சல் நிறத்தில் மாறிவிடும்.
- மானாவாரி விதைப்புக்கு ஆயத்தமாகவும் விவசாயிகள் விதையை விதைநேர்த்தி செய்தல் மற்றும் விதையை கடினப்படுத்தியபின் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 08.10.2025 முதல் 12.10.2025 வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 33-37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 04-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று தென்மேற்கு மற்றும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

அதிக மழை காரணமாக நெல் பயிர் மூழ்குவதற்கும், புகையான் தாக்குதல் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மழை நின்ற பின் ஒரு ஏக்கருக்கு தையாமீத்தாக்சைம் 25 WG 40 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். விதைத்தல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகளை ஒத்திவைக்கவும்.

**வாழை**

அதிக மழை காரணமாக வாழை மரங்கள் சாய்வதற்கான வாய்ப்புள்ளது. முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். காய்ந்த சருகுகளை அப்புறப்படுத்தவும். 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கும் தார்விட்ட மரங்களுக்கும் முட்டுக்கால் வசதியினை ஏற்படுத்தவும்.

**தென்னை**

அடுத்த சில நாட்களுக்கு அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னையில் காய்ந்த மற்றும் முதிர்ந்த காய்களை பறித்துவிடவும் பழைய காய்ந்த மட்டைகளை அகற்றி விடவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும்.

**பருத்தி**

அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவரி மற்றும் இரவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கு தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். உரம் வைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை தள்ளி வைக்கவும்.

**தக்காளி**

நிலத்தில் சரியான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும். விதைத்தல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தவிர்க்கவும் அல்லது ஒத்திவைக்கவும். முதிர்ந்த காய்கள் அல்லது பழங்கள் நிலத்திலேயே வீணாவதை தவிர்க்க உடனடியாக அறுவடை செய்து பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

**அவரை**

கனமழை மற்றும் காற்று காரணமாக கொடிவகை பயிர்களில் பந்தல், கம்பி மற்றும் கால்கள் முறிந்துவிட வாய்ப்புள்ளது. பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும்.

**கால்நடை**

இடி மின்னலுடன் கூடிய கனமழை வருவதற்கான வாய்ப்பள்ளதால், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்புவதை தவிர்க்கவும். மின்கம்பம் மற்றும் மரத்தடியில் கட்டுவதை தவிர்த்து பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை நன்கு உலர வைத்து கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.

**4. மலைப்பிரதேசமண்டலம்**

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் கனமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 17-20°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 07-11°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- அனைத்துபயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி வழங்குதல். உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற உழவியல் / பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.
- பூண்டு பயிரில் ஃபுசேரியம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, கார்பென்டசிம் @ 1கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லிஎன்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் மண்ணில் ஊற்ற வேண்டும்.
- உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி, மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- முட்டைக்கோசு பயிரில் கறுப்பு அழுகல் நோய்யை கட்டுப்படுத்த, காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில் இலைவழி மூலம், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லாம் / அல்லது பேசிலஸ்சப்டிலிஸ் @ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- இஞ்சி மென் அழுகல் மேலாண்மை • போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம் • நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். • நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை @ 1%என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- வாழை ii) 5 மாத வயதுள்ள மரங்களுக்கு மரக் கம்பங்களைப் பயன்படுத்தி ஆதரவு அளிக்கவும்.

  ii) வடிகால் வசதி செய்து, உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

  iii) அழுகும் மற்றும் அழுகிய இலைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் மிதமானமழையும், 09.10.2025 கனமழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 - 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம்

*50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-07 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

**வேளாண் அறிவுரை**

- *தற்போது நிலவும் மாறுபட்ட காலநிலையில், மரவள்ளியில் மாவுப்பூச்சி என்று சொல்லப்படும் கள்ளிப்பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் முக்கிய அறிகுறிகளானது நுனிக்குருத்து உருமாறியும் வளர்ச்சி குன்றியும் காணப்படும். செடியின் நுனியிலுள்ள இலைகள் ஒன்றாக இணைந்து முடிக்கொத்தாக காணப்படும் மற்றும் இடைக்கணுவின் நீளம் வெகுவாக குறைந்துவிடும். எனவே இதன் பரவலைக் கட்டுப்படுத்த **அனாகைரஸ் லோபெஸி** என்ற ஒட்டுண்ணியை ஒரு ஏக்கருக்கு 200 எண்கள் என்ற அளவில் விட வேண்டும் அல்லது மொவென்டோ ஓடி என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி என்ற அளவில் கலந்து 7 மாத வயது வரை உள்ள பயிரின் மீது தெளிக்கலாம்.*
- *கொடிவகைக் காய்கறிப் பயிர்கள் பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது மழை பெய்து வருவதால் காய்கறி நுண்ணூட்ட கலவையை லிட்டருக்கு 3 – 5 கிராம் என்ற அளவில் கலந்து இலைவழி தெளிப்பாக பூ மற்றும் காய்பிடிக்கும் தருணத்தில் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிப்பு செய்ய வேண்டும். இதனால் காய்களின் எடை மற்றும் விளைச்சல் அதிகரித்து, அதிக இலாபம் பெற முடியும்.*

**கால்நடை ஆலோசனைகள்**

<u>**ஆடுகளுக்கு வேளாண் காடுகள்**</u>

- *ஆடுகளுக்கு தீவன தேவையை பூர்த்தி செய்வதற்காக, வடகிழக்கு பருவமழை காலத்தில் வேளாண் காடுகளை உருவாக்க குறிப்பாக மரங்களை இத்தருணத்தில் நடலாம். வாய்க்கால் வரப்புகளில் கிழக்கு மேற்காக 1 மீட்டர் X 1 மீட்டர் இடைவெளியில் வேல், வாகை, கல்யாண முருங்கை, ஆலமரம், கிளரிசிடியா, கொடுக்காபுளி, சுபாபுல், அகத்தி மற்றும் முருங்கை போன்ற தீவன மரங்களை நடலாம். மர வரிசைகளுக்கு இடையே அதிக இடைவெளி கொடுப்பது நல்லது. ஆடுகளின் தீவன தேவையில் பாதியளவு மர இலைகளை அதாவது வாகை, கிளரிசிடியா, சுபாபுல் மற்றும் ஆலமர இலைகளை கொடுப்பதால் புற்களை மட்டும் உண்ணும் ஆடுகளை விட உற்பத்தி திறன் மற்றும் சத்து பயன்பாடும் அதிகம் என ஆராயச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது. மர வரிசைகளுக்கு இடையே புற்கள் (கினியா மற்றும் கொழுக்கட்டைப்புல்) மற்றும் பயறு வகை தீவனங்களான முயல் மசால், வேலி மசால், குதிரை மசால் மற்றும் தட்டை பயறு போன்றவைகளை பின்னாளில் பயிரிடலாம். கொழுக்கட்டை புல் வயலுக்கு டிஏபி உரத்தை அளிப்பதால் விளைச்சல் அதிகரிக்கும். அதனால் தற்போதைய பருவ மழை காலத்தில் தேவையான அளவு டிஏபி உரத்தை அளிக்க வேண்டும். ஆடுகளை வேளாண் காடுகளில் நேரடியாக மேய்ச்சலுக்கு பயன்படுத்தும்போது சிறு பகுதிகளாக பிரித்துக் கொண்டு சுழற்சி முறையில் ஆடுகளை மேய விட வேண்டும். பொதுவாக ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வரை மேய விட்ட பின், ஆறு வாரங்களுக்கு இடைவெளி கொடுக்க வேண்டும். வேளாண் காடுகளில் குறைந்தது 30 சதவீதம் பயறு வகை பயிர்கள் வளர்ப்பதால் மேயும் ஆடுகளுக்கு போதிய அளவு புரதம் மற்றும் கால்சியம் சத்துக்கள் கிடைக்கும்.*

**6. வடகிழக்கு மண்டலம்**

*வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 04-16 கி.மீ ஆகவும் பெரும்பாலும் தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரைகள்**

- அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். நாற்றங்கால் வயலுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்றவற்றை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம் மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும் நடவுவயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷம் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுபுழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசால்பான் 400 மி.லி / ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- இளம் நாற்றங்காலில் இலைபேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான 40 எஸ்.எல் 50 மி.லி தெளிக்கலாம் நெல் பயிரில் இலையுறை கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயின் அறிகுறிகள் தென்படும் போது வேப்ப எண்ணெய் 3% என்ற அளவில் தெளிக்கலாம்.
- அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- மழைக்காலத்தில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும்.
- நல்ல காற்றோட்ட வசதிளை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும்.
- இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடை கொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் வாரம் ஒருமுறை பிளிச்சிங்பௌடர் தூவிவிட வேண்டும். இத நோய்த் தொற்றை தடுக்க உதவும்.
- தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட பன்றிக்குட்டிகளின் கொட்டகையின் தரையை வெதுவெதுப்பான உப்புகரைசல் நீர் அல்லது தரம் வாய்ந்த கிருமி நாசினியை கொண்டு வாரம் ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும். இது ஈகோளை கிருமியினால் ஏற்படும் நோய் தொற்றை தடுக்கும். இல்லையேல் பன்றிக்குட்டிகளில் கழிச்சல் ஏற்பட்டு இறப்பு ஏற்படும்.
- இம்மாத தொடக்கம் முதல் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய்க்கான தடுப்பூசியை செலுத்த வேண்டும்.
- கால்நடை கொட்டகைகளில் ஈ மற்றும் கொசு தொல்லையை தடுக்க வாரம் ஒருமுறையேனும் நொச்சி இலை புகை மூட்டம் போட வேண்டும்.
- புதிதாக குட்டி ஈன்ற பெட்டை ஆடுகளுக்கு இரனஜன்னி தடுப்பூசி செலுத்த வேண்டும்.

- பரவலாக சில இடங்களில் ஆங்காங்கே ஆடு/செம்மறி ஆடுகளில் நீலநாக்கு நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்நோயை தடுக்கும் பொருட்டு கியூளிகாய்ட்ஸ் கொசுக்களை அழிக்க வேண்டும். ஏனெனில் இது இந்நோய் கிருமியை பரப்பும் உயிரியாக விளங்குகிறது.
- தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெட்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு.
- கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களுக்கு இடைநிலை பருவங்களாக விளங்கும் உயிரிகள் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டகையை சுற்றியுள்ள மழைநீரை அகற்ற வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் 08.10.25 மற்றும் 12.10.25 அன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 32 - 33$^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 25 $^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 80 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 50 % பதிவாக வாய்ப்புள்ளது. குாற்றின் வேகம் மணிக்கு 10 – 14 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- தோட்டக்கலை பயிர்களான வாழை, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப்பட்டை மற்றும் தென்னை மரங்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.
- மர வாசனைப் பயிர்களில் பண்ணைக் கழிவுகளைக் கொண்டு நிலப் போர்வை அமைத்து மண்ணின் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- **நெல்லில் வேர் நனைத்தல் :** நெல் நடவிற்கு முன்பாக ஒரு எக்டருக்கு அசோஸ்பைரில்லம் 1 கிலோ மற்றும் பாஸ்போபாக்டீரியா (அ) அசோபாஸ் 1 கிலோ வீதம் 40 லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசல் தயார் செய்து நெல் நாற்றுக்களின் வேர்களை கரைசலில் 15 முதல் 30 நிமிடங்கள் வரை நனைத்து பின் நடவு செய்யவும்.
- மழை இருப்பதால், அறுவடை செய்த நெல் மணிகளை உலர்வான இடங்களில் சேமிக்கவும்.
- தென்னை மரங்களை சுற்றி 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல்நோக்கியவாறு தென்னை தொண்டுகளை அல்லது தென்னை நார்கழிவுகளை பரப்பி மண்ணின் நீர் வளத்தை பாதுகாக்கலாம். பேசில்லஸ் சப்டில்லிஸ் உயிரியியல் காரணியை **2.5** கிலோ + தொழு உரம் **300** கிலோ என்ற அளவில் கலந்து மரத்திற்க்கு **2** கிலோ என்ற அளவில் வேர்பகுதியில் இடவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க. கோவை**